
இதழ்-80

01.02.2025

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**வடிவமைப்பாளர்**
ச. மதுஷா
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

03 சிவபூமி திருக்குறள் வளாகம் - தமிழ் பல்கலைக்கழகத்திற்கான அஸ்திவாரம்
06 ஈரடியால் உலகளந்த வள்ளுவர்
11 வெள்ளி விழா காணும் சிவபூமி
15 தைப்பொங்கலை முன்னிட்டு விழாக்கோலம் பூண்ட யாழ்ப்பாணம்
17 ATM இயந்திரம் உருவாக காரணமாக இருந்த காதல்
19 ஈழத்து நாடக கலையின் பேராளுமை குழந்தை ம. சண்முகலிங்கன்
24 சர்வதேச தாய் மொழி தினம்
26 காவியமாகிப் போன ரோமியோ ஜூலியட் கதை
30 பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவைகளின் முக்கியத்துவம்
35 என் கால்கள் வழியே...
31 மரடோனா எனும் அசகாய சூரன்

வாசகர்கள் அனைவருக்கும் இனிய அமுத விழா சிறப்பு மலர் நல்வாழ்த்துக்கள்

# சிவபூமி திருக்குறள் வளாகம் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கான அஸ்திவாரம்!




தமிழ் மொழி பெருமையானது. அதன் பெருமைக்கு, அம்மொழியில் தோன்றியுள்ள வளமான இலக்கியங்களும் இலக்கணங்களுமே காரணமாகிறது. அவ்வாறானதொரு இலக்கிய பெருமையில் முதன்மையானதாக திருக்குறள் அமைகின்றது. ஏதொவொரு இலக்கியம், ஏதொவொரு சமுக எண்ணப்பிரதிபலிப்பாய் எழுவதே எதார்த்தமானதாகும். அது தவறுமில்லை. அவ்எதார்த்தத்தை திருக்குறள் உடைத்துள்ளது. ஆதலாலேயே உலகப் பொதுமறையெனவும் சிறப்பிக்கப்படுகிறது. இது தமிழன்னையை அழகுபடுத்துகிறது. தமிழன்னையை அழகுபடுத்தும் திருக்குறளை வரலாறு தோறும் பாதுகாக்கும் முனைப்பில் கருங்கற்களில் பதிப்பதனூடாக ஈழத்தமிழர், தமிழ் மீது கொண்ட காதல் உலகிற்கு பறைசாற்றப்படுகிறது.

இப்பெருமையை ஈழத்தமிழருக்கு அளித்துள்ள சிவபூமிக்கும் அதன் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுக்கும் தூமி நன்றியை காணிக்கையாக்குகிறது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் தலைமையிலான சிவபூமி அமைப்பின் மற்றொரு முயற்சியாக, மாவிட்டபுரத்தில் பெப்ரவரி-02 அன்று திருக்குறளுக்கான வளாகம் திறக்கப்படுகின்றது. இது ஈழத்தில் சிவபூமியின் கடந்தகால பணிகளின் தொடர்ச்சியாக ஒரு மைல்கல்லாகவே அமைகின்றது.



திருக்குறள் வளாகம் நீண்டகால இலக்குகளை கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. திருக்குறளை கருங்கற்களில் பதிப்பதனூடாக அதன் சிறப்பை எடுத்தியம்புவதுடன், முழுமையாக ஆய்வுக்கான இலக்குகளை மையப்படுத்தியே நிறுவப்பட்டுள்ளது. இதன்

உருவாக்கத்தில் ஆறு. திருமுருகன் அவர்களின் எண்ணங்கள் பல்கலைக்கழகம் எனும் விருட்சத்திற்கான விதையாகவே அமைகின்றது. சிவபூமி அமைப்பினால் மாவிட்டபுரத்தில் திருக்குறளின் கருங்கல் பதிப்பு “வளாகமாக“ பெயரிடப்பட்டுள்ளது. இவ்வளாகம் எதிர்காலத்தில் தமிழ் ஆய்வுத் துறையில் பல்கலைக்கழகமாக உயர வேண்டும் என்ற உயரிய நோக்கம் உருவாக்கத்திலேயே காணப்படுகின்றது. திருக்குறள் வளாகம் பற்றி வலையொளி ஒன்றுக்கு வழங்கிய காணொளியில் ஆறு. திருமுருகன் அவர்கள், “எதிர்காலத்திலே இவ்வளாகம் விருட்சம் பெற்று ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகமாக தமிழ் ஆராய்ச்சி நிலையமாக பரிணமிக்க வேண்டும் எனக் கனவு காண்கின்றோம்“ எனத் தெரிவித்திருந்தார். இக்கனவு ஈழத்தமிழர்களுக்கு அவசியமானதாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று தமிழகத்தில் தஞ்சையில் அமைக்கப் பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியின் ஆய்வுத் துறைகள் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் தனித் திட்டங்களாக அறிவியல்- வாழ்வியற் களஞ்சிய மையம், பெருஞ் சொல்லகராதித் திட்டம், தூயதமிழ்-சொல்லாக்க அகரமுதலிகள் திட்டம் ஆகியனவும், பதிப்புத்துறை, நூலகம், அருங்காட்சியகம் ஆகியனவும் தமிழ் மொழியை மையப்படுத்தி தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இது தமிழகம் சார்ந்து தமிழ் இருப்பை பேணுவதிலும், தமிழ் மொழி சார்ந்த வரலாற்றை பேணுவதிலும் அறிவியல் துறையில் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது.

இத்தகையதொரு பரந்த ஆய்வு ஈழத்தமிழ் மொழி வரலாற்றுக்கும் அவசியப்படுகின்றது. தமிழ் மொழியின் வரலாறு என்பது பெரும்பாலும் தமிழகத்தை மையப்படுத்தியதாகவே அமைகின்றது. ஈழத்தமிழ் வரலாறு இடைச்செருகலாக அமைகின்றது. ஈழத் தமிழ் சமூகம் இந்தியாவின் தொப்புள் கொடி என வர்ணிக்கப்படுகின்ற போதிலும் தனித்துவமான தமிழ் வரலாற்றை இலக்கணத்தை இலக்கியத்தை பேணி வருகின்றார்கள்.



அவை பாதுகாக்கப்படுவதும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதும் அவசியமானதாகும்.

“நாமும் நமக்கென்றோர் நலியா கலையுடையோம்“ என்பதை மார்தட்டுவதால் மாத்திரம் ஈழத்தமிழ் வரலாற்றின் சிறப்பு நிலைபெற்றிட போவதில்லை. அதனை உறுதி செய்யக்கூடிய ஆய்வுகளும் சான்றுகளும் ஈழத்தமிழர்கள் மத்தியில் உருவாக வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை 2024ஆம் ஆண்டு பொன்விழாவை நிறைவு செய்துள்ளது. எனினும் ஈழத்தமிழ் மொழியின் ஆய்வுத்துறையில் தனித்துவமான நிலையை உறுதி செய்யமுடியவில்லை. கடந்த ஐந்து வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சர்வதேச ஆய்வு மாநாட்டை ஒழுங்குபடுத்தி வருகின்றது. இவ்ஆய்வு மாநாடு கருப்பொருட்களும் பொதுமையான தமிழக வரலாற்றை ஒத்ததாகவே அமைகின்றது. 2023ஆம் ஆண்டு நான்காவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டின் வாழ்த்துரையில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் இக்குறையை சுட்டிக்காட்டியிருந்தார். மேலும் ஈழத்தமிழர்களின் தமிழ்ச்சிறப்பை சமகால நோக்கு நிலையில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தமிழ்த்துறையின் பொறுப்பையும் நினைவுபடுத்தியிருந்தார். ஐந்தாவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டின் கருப்பொருள், “இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்: இலக்கியத்தின் ஊடான மானுடவிடுதலை“ என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து தமிழ் வரலாறு தனது தனித்துவத்தை நிலைநாட்ட பரந்த ஆய்வு விரிவாக்கம் காலத்தின் தேவையாகும். 1921ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் கல்விப் பாரம்பரியத்தின் சுயாதீனத்தை பாதுகாக்கும் முனைப்பில் சேர். பொன். இராமநாதனால் நிறுவப்பட்ட பரமேஸ்வரா கல்லூ ரி 1974ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் உயர் கல்வி நிறுவனமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக உயர்ந்தது. அவ்வாறான பாதையில் எதிர்காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கான அஸ்திவாரமாக திருக்குறள் வளாகம் அமைய வேண்டும் எனும் கனவையே கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் திருக்குறள் வளாகம் நிறுவுவதில் கொண்டுள்ளார். நல்லோர் எண்ணங்களும் விதைகளும் நிச்சயம் பெரும் விருட்சமாகும்.





# ஈரடியால் உலகளந்த வள்ளுவர்

இயேசு பிரான் அவதரித்த நாளை மையமாக வைத்து உலக நாட்காட்டிகளே தங்களை உருமாற்றிக்கொண்டன. கிமு கிபி என்ற வரையறையின் ஆரம்பமும் அதுவே. அவ்வாறே தமிழ் கூறு நல்லுலகு தன் கால நாட்காட்டியை திமு திபி என்று உருமாற்றி உபயோகிக்க காரணமாகிறார் திருவள்ளுவர். யாரந்த திருவள்ளுவர்.. ? அவர் பிறந்த நிலமென்ன? வளர்ந்த விதம் என்ன? ஆற்றிய கருமங்கள் என்ன? எதுவுமே தெரியாது. எம்மிடமிருப்பது ஈரடி வாசகமாய் எழுதிய திருக்குறள் என்கிற ஒரே நூல்தான். அந்த நூல் சொல்லும் மகத்துவத்தாலே மகானாகி , தெய்வமாகி உயர்ந்து நிற்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவரின் பிறப்பு முதலான வரலாற்றை அறுதியிட்டு கூற போதுமான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பதுதான் உண்மை. அவர் வாழ்வியலின் அத்தனை அர்த்தங்களையும் குறள் கொண்டே எம்மால் ஊகிக்கமுடிகிறது. குறளின் அடிப்படையில் அவர் தாயார் பெயர் ஆதி. தந்தையார் பெயர் பகவன். இவர் வாசுகி என்பவரை மணந்ததாகவும் சொல்லப்படுகிறது.

திருவள்ளுவர் தமது வாழ்க்கையில் அனுபவித்துணர்ந்து ஓலைச்சுவடிகளில் தீட்டி வைத்த அந்தப் பட்டறிவு யதார்த்த வரிகளை மணக்குடவர் என்பவர் தொகுத்து எழுதியுள்ளாதாக கூறுகின்றனர். மணக்குடவர் திருவள்ளுவர் காலத்தவராக இருந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் திருவள்ளுவரைப்பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும். மணக்குடவர் எப்போதோ எழுதிய மூலத்

தொகுப்பை கண்டு பிடித்து முதலில் அச்சில் ஏற்றியவர் தஞ்சையை சேர்ந்தஞானப்பிரகாசன் என்பவர்.

மதுரையிலே தமிழ் அரசர்கள் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த கதை யாவரும் அறிவோம். மூன்று சங்கங்கள் இருந்தன. கடைசியாக இருந்த சங்கம் கி.மு.300க்கும் கி.பி.250க்கும் இடைப்பட்டது. அப்போதுதான் திருக்குறள், புலவர்கள் நடுவிலே பாடி அறிமுகம் செய்யப்பட்டது. மதுரையை “ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்“ என்ற பாண்டிய மன்னன் அன்று ஆட்சி புரிந்துள்ளான். கிடைக்கின்ற செய்திகளையெல்லாம் இணைத்துப் பார்க்கின்றபோது, வள்ளுவர் என்ற மனிதர் இருந்தார் என்பதும், அவர் எழுதிய நூலே




திருக்குறள் என்பதும் உறுதியாகிறது. ஆனால் அவரைப் பற்றிய அத்தனை செய்திகளும் அழிக்கப்பட்டுள்ளன.

வள்ளுவர் காலத்துக்கு முன்பு இருந்த புலவர்களைப் பற்றியெல்லாம் சான்றுகள் இருக்கிறபோது, இவரைப்பற்றி எதுவும் இல்லாமல் இருப்பது வியப்புதான். இவர் தொன்மையான தமிழ்க் குடியைச் சேர்ந்தவர் என்ற கருத்து அன்றைய புலவர்களுக்கும் இருந்துள்ளது என்பதை காலம் காலமாய் வழங்கி வரும் சில கதைகளும், கி.பி.1050இல் எழுதப்பட்ட ‘திருவள்ளுவமாலை’ என்ற நூலில் உள்ள சில பாடல்களும் தெரிவிக்கின்றன.

அக்கதைகளில் ஒன்று இதுதான்.

மதுரையில் இருந்த தமிழ்ச்சங்கத்தில் திருக்குறளை அரங்கேற்றம் செய்ய வள்ளுவர் சென்றிருக்கிறார். சங்கப்புலவர்கள் அவருக்கு அங்கீகாரம் வழங்கவில்லை.

அதை எதிர்த்து தன்னுடைய நூலை சங்கப் பலகையில் ஏற்றினாராம். ஒரு முழச்சதுரம் உள்ள இப்பலகை தகுதி மிக்க ஒவ்வொருவருக்கும் ஒரு முழம் வளர்ந்து இடம் தரக்கூடியது. அப்பலகை மற்ற புலவர்களை பொன்தாமரை குளத்தில் தள்ளிவிட்டு, திருக்குறளை மட்டும் ஏற்றுக் கொண்டதாம். வள்ளுவருக்கும் பிற புலவர்களுக்கும் இடையே ஏதோ ஒரு வகையான மோதல் நடந்துள்ளது என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிகிறது.

சாதி, மதக் கருத்துக்களை எதிர்த்து பல குறட்பாக்களை எழுதியுள்ளார் திருவள்ளுவர். அதை சுட்டிக்காட்டும் வகையிலே திருவள்ளுவ மாலையில் சில பாடல்கள் உள்ளன. அதில் ஒரு பாடல்:

"ஆற்றல் அழியுமென்று
அந்தணர்கள் நான்மறையைப்
போற்றி உரைத்து ஏட்டின் புறத்தில்
எழுதார் – ஏட்டை எழுதி
வல்லுநரும் அல்லாரும்
வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று"

சாதி, மத சூழ்ச்சிகளை யாரும் அறிந்து தெளிவு பெறக்கூடாது என்று ரிக், யசூர், சாம, அதர்வணம் என்கிற நூல்களை ஆரியர்கள் மறைத்து விட்டார்கள். ஆனால் வள்ளுவரோ அந்த நூல்களுக்கு எதிராக மூன்று வகையான வாழ்வின் நெறிகளைச் சொல்லும் திருக்குறளை எழுதினார் என்பதுதான் இப்பாடலின் பொருள். இக்கருத்துக்களையும், திருக்குறளையும் படித்து புரிந்து கொள்ளும்போது, திருவள்ளுவர் சமூக சீர்த்திருத்த அறிஞராக மனதில் அழுத்தமாகப் பதிந்து விடுவார்.

அதேவேளை இல்லறவியலின் இன்பங்களை நயந்துரைப்பதிலும் அவர் ஈடற்று நிற்கிறார். உலகத்திலுள்ள அத்தனை ஜீவன்களுக்காகவும் ஒன்றரை அடியில் குறள் எழுதிய திருவள்ளுவர், ஒரே ஒரு ஜீவனுக்காக மட்டும் நான்கடியில் ஒரு பாட்டு எழுதியுள்ளார் தெரியுமா! யார் அந்த பெருமைக்குரிய ஜீவன்? அவரது மனைவி வாசுகி தான். அந்த அம்மையார் தனது கணவரின் செயல்பாடுகள் குறித்து வாழ்நாள் முழுவதும் விமர்சித்ததே இல்லை. அவர் செய்தால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்று நினைத்தவர். வள்ளுவர் சாப்பிடும் போது ஒரு ஊசியும் தண்ணீர் உள்ள ஒரு கிண்ணமும் அருகில் வைக்கச் சொல்வாராம். அம்மையாரும் அப்படியே சைய்து வந்துள்ளார். இதற்கான காரணத்தை அந்த அம்மையார் இறக்கும் தருவாயில் தான் கணவரிடம் கேட்டாராம். பரிமாறும் போது கீழே விழும் சோறை எடுத்து தண்ணீர் உள்ள ஒரு கிண்ணத்தில் கழுவி தண்ணீரை வடித்து விட்டு, மீண்டும் அந்த சோறைப் சாப்பாட்டுடன் கலந்து கொள்வதற்கே வள்ளுவர் அவ்வாறு செய்தாராம். ஆனால் பரிமாறிய ஒருநாளில் கூட ஒருபருக்கை சோறும் தரையில் விழாததால் அந்தக் காரணம் அம்மையாருக்கு அதுவரை தெரியாமலே இருந்துள்ளது.

வள்ளுவரின் இல்லத்துக்கு துறவி ஒருவர் வந்தார். அவர்கள், இருவரும் பழைய சாதம் சாப்பிட்டனர். அப்போது வள்ளுவர் வாசுகியிடம், சோறு சூடாக இருக்கிறது. விசிறு, என்றார். பழைய சோறு எப்படி சுடும்?அந்த அம்மையார் கேள்வி கேட்கவில்லை. விசிற ஆரம்பித்து விட்டார். இப்படி, கணவருடன் வாதம் செய்யாமல் விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் கொண்டிருந்தாராம்.

அந்த கற்புக்கரசி ஒருமுறை கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். வள்ளுவர் அவரை

அழைக்கவே, கயிறை அப்படியே விட்டு விட்டு வந்தார். குடத்துடன் கூடிய அந்தக் கயிறு அப்படியே நின்றதாம்.

அந்த அன்பு மனைவி ஒருநாள் இறந்து போனார். நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை படைத்து இவ்வுலகு என்று ஊருக்கே சொன்ன அந்தத் தெய்வப்புலவரே, மனைவியின் பிரிவைத் தாங்காமல் கலங்கி விட்டார். நேற்றிருந்தவர் இன்றைக்கு இல்லை என்பது தான் இந்த உலகத்திற்கே பெருமை என்பது இந்தக் குறளின் பொருள். ஆக, தனது கருத்துப்படி, அந்த அம்மையாரின் மறைவுக்காக பெருமைப்பட்டிருக்க வேண்டிய அவர், மனைவியின் பிரிவைத் தாளாமல்,

“அடியிற்கினியாளே அன்புடையாளே படிசொல் தவறாத பாவாய்- அடிவருடி பின்தூங்கி முன்னெழும்பும் பேதாய்- இனிதா(அ)ய் என் தூங்கும் என்கண் இரவு“

என்று ஒரு நான்கு வரி பாட்டெழுதினார்.அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே! என் சொல்படி நடக்கத் தவறாத பெண்ணே! என் பாதங்களை வருடி தூங்கச் செய்தவளே! பின் தூங்கி முன் எழுபவளே! பேதையே! என் கண்கள் இனி எப்படித்தான் இரவில் தூங்கப் போகிறதோ! என்பது பாட்டின் உருக்கமான பொருள்.

திருக்குறள் மனிதவள மேம்பாட்டுக்கு தேவையான அறம், பொருள், காமம் என்ற மூன்று அடிப்படைக் கோட்பாடுகளை தெளிந்து உணர்த்துவதுடன் அதில் உள்ள குறை நிறைகளை நிதானமாக சுட்டிக்காட்டி மனித இனத்தை திருத்த முற்படுகிறது.
கற்பனையான கடவுளர்கள் எவரையும் வள்ளுவர் ஏற்கவில்லை. சாதி பிரிவினையையும், விலங்குகளை பலியிட்டு நடத்தும் வேள்விகளையும் எதிர்த்தார். பொய் பேசாமல், களவு செய்யாமல், நாகரிகமுடன் வாழ எண்ணினார். அனைவரையும் கற்கும்படி வலியுறுத்தினார். இயற்கையை நேசித்தார். குடும்ப வாழ்க்கையை முறையாகவும் பண்புடனும் பயன்படுத்தும்படி கூறினார். ஆட்சி செய்கிறவர்கள் மனித நேயத்துடன் இருக்க வேண்டும் என்று விரும்பினார். இக்கருத்துக்களே அவர் எழுதிய 1330 குறட்பாக்களிலும் உள்ளன. இவர் சிந்தனைகள் மானிட வர்க்கத்தினர் அனைவருக்குமே தேவையான வகையில் இருக்கின்றன என்பதாலேதான் திருக்குறள் உலகப் பொது மறையானது.

வள்ளுவர் ஒரு கிறித்துவர், அவர் ஒரு சமண மதத்தவர், அவர் பௌத்தர் என்றெல்லாம் கூட சிலர் நேரத்தை வீணாக்கி ஆய்வு செய்கிறார்கள். அவரின் குறட்பாக்களில் இருக்கின்ற கருத்துக்களை வைத்துக் கொண்டு எல்லோருமே உரிமை கொண்டாடுகிறார்கள்.
பொன்னும் பொருளும் நிறைந்த மூட்டை ஒன்று கேட்பாரற்று இருந்தால், எல்லோருமே அதை உரிமை கொண்டாட நினைப்பார்கள் இல்லையா? அது போலவே இதுவும்.

இந்தியாவின் தென் கோடியில் அமைந்துள்ள முக்கடல் சங்கமிக்கும் இடமான கன்னியாகுமரியில், அவரின் புகழைப் பறைசாற்றும் விதமாக அவருக்கென்று ஒரு பிரம்மாண்டமான சிலை ஒன்று தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. 133 அடி உயரமுள்ள இச்சிலை, 30 அடி உயரமுள்ள பாறை மீது அமைந்துள்ளது. இதனை அமைக்க 10 ஆண்டுகள் தேவைப்பட்டது என இதை வடிவமைத்த பிரபல சிற்பி , கணபதி ஸ்தபதி கூறியுள்ளார். மேலும், சிலையின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

அவர் நினைவாக, சென்னையில் “வள்ளுவர் கோட்டம்“ ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவர் இயற்றிய திருக்குறளின் 1330 குறள்களும், இங்குள்ள குறள் மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள ரஸ்ஸல் ஸ்கொயரில் இருக்கும் ‘ஸ்கூல் ஆ.்.ப் ஓரியண்டல் மற்றும் ஆப்ரிக்கன் ஸ்டடீஸ்’ என்னும் கல்வி நிறுவனத்தில், அவரது திருவுருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

உலக மக்களின் முன் தமிழர்கள் பெருமிதமாக நெஞ்சம் நிமிர நிற்கும்படி செய்த மாமனிதர் திருவள்ளுவர். அதனாலேயே வள்ளுவர் நிற்கும் சிலையை கலைஞர் மு. கருணாநிதி கன்னியாகுமரியில் அமைத்தார். தற்போது ஈழத்தில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் வள்ளுவர் நின்ற நிலையில் உள்ள சிலையை மாவிட்டபுரத்தில் நிறுவி உள்ளார். அதனையே அட்டையில் காண்கிறீர்கள். அதனோடு ஈரடிப் பாக்கள் யாவும் கருங்கல்லில் பொறிக்கப்பட்டு, பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த திருக்குறள் வளாகம் ஈழத்திற்கும் இந்தியாவிற்குமான உறவுப் பாலத்தின் இன்னொரு அத்திபாரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

வள்ளுவர் பெருமைகள் 2000 ஆண்டுகள் கடந்தும் பேசப்பட்டு வருகிறது. அறிவியல் கண்டு பிடிப்புகளாலோ, அரசாண்டதாலோ அவர் அப்பெருமையை உருவாக்கித் தரவில்லை. தன் அறிவாலும், சிந்தனையாலும் உருவாக்கித் தந்திருக்கிறார். அவர் எழுதிய திருக்குறள் அப்பெருமையை தமிழர்களுக்கு வழங்கியிருக்கிறது.



# வெள்ளிவிழா காணும் சிவபூமி அறக்கட்டளை எனும் பெருவிருட்சத்தின் கிளைகள்

## அ. சிவபூமியின் திருக்கோயில்கள்

1. சிவபூமி திருவாசக அரண்மனை - நாவற்குழி

2. சிவபூமி தெட்சிணாமூர்த்தி திருக்கோயில் நாவற்குழி

3. சிவபூமி திருமந்திர அரண்மனை -கொக்கட்டிச்சோலை

4. சிவபூமி ஐயனார் கோயில் -குடியேற்றத்திட்டம், நாவற்குழி

5. சிவபூமி சிவலிங்க பெருமான், செம்மணி நுழைவாயில்

## ஆ. சிவபூமியின் பாடசாலைகள்

6. சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை -கோண்டாவில்

7. சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை கிளிநொச்சி

8. சிவபூமி கோணேச்சரம் சிறுவர் மனவிருத்திப் பாடசாலை திருகோணமலை

9. சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை -கோண்டாவில்

## இ. சிவபூமியின் மடங்கள் மற்றும் ஆச்சிரமங்கள்

10. சிவபூமி மடம் - கீரிமலை

11. சிவபூமி யாத்திரீகர் மடம் - கீரிமலை

12. சிவபூமி ஞான ஆச்சிரமம் - குப்பிளான்

13. சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் - மயிலிட்டி

14. சிவபூமி ஆச்சிரமம் கலஹா, கண்டி



15. சிவபூமி நிலையம் - பம்பிலப்பிட்டி, கொழும்பு

16. சிவபூமி தேவார மடம் - வட்டுக்கோட்டை

### ஈ. சிவபூமியின் முதியோர் இல்லங்கள்

17. சிவபூமி முதியோர் இல்லம் - சுழிபுரம்

18. சிவபூமி முதியோர் ஆச்சிரமம் - கீரிமலை

### உ. சிவபூமியின் தனித்துவமான உருவாக்கங்கள்

19. சிவபூமி யாழ்ப்பாணம் அருபம்பொருட்காட்சியகம் - நாவற்குழி

20. சிவபூமி யாழ்ப்பாணம் திருக்குறள் வளாகம் - மாவிட்டபுரம்

21. சிவபூமி கலைக்களஞ்சியம் - கீரிமலை

22. சிவபூமி அச்சகமும் சிவபூமி பத்திரிகையும்

### ஊ. அபயம் அறக்கட்டளை உடன் இணைந்த சிவபூமியின் மருத்துவ நிலையங்கள்



23. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - ஆனைக்கோட்டை

24. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - இயக்கச்சி

25. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - மயிலிட்டி

26. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - இணுவில்

27. சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் - கலஹா, கண்டி

28. சிவபூமி அபயம் கரு வளர்ச்சி

சிகிச்சை நிலையம் - யாழ்ப்பாணம்

### எ. விவசாயப் பண்ணைகள்

29. சிவபூமி விவசாயப்பண்ணை நெல்லியான், சுழிபுரம்

30. சிவபூமி பஞ்சாமிரத தோட்டம் - கோவில் வயல், இயக்கச்சி

31. சிவபூமி கோட்டம் பண்ணை கொட்டாண்டார்குளம்

32. சிவபூமி அன்னபூரணித் தோட்டம் இயக்கச்சி

33. சிவபூமி ரோகினி தென்னந்தோட்டம் -இயக்கச்சி

34. சிவபூமி செவ்விளநீரத் தோட்டம் - நாவற்குழி

35. சிவபூமி மூலிகைத் தோட்டம் -நாவற்குழி

36. சிவபூமி பூம்புகார் தோட்டம் - அரியாலை

37. சிவபூமி வயல் மறுவன்புலவு

### ஏ. விலங்குகள் சரணாலயம்

38. சிவபூமி நாய்கள் சரணாலயம் - இயக்கச்சி

39. சிவபூமி கோசாலை - சுழிபுரம்

40. சிவபூமி கோசாலை - நாவற்குழி

### ஐ. சிவபூமியின் சிலைகள்

41. ஆறுமுக நாவலர் சிலைகள் - கீரிமலை, திருக்கேதீச்சரம் மற்றும் சம்பூர்

42. தியான நிலை சிவபெருமான் சிலை - திருக்கேதீஸ்வரம்



## ஒ. ஏனைய பணிகள்

43. சிவபூமி கல்வி நிதியம்

44. சிவபூமி மருத்துவ நிதியம்

45. சிவபூமி வாழ்வாதார நிதியம்

## ஐ. நடைபெறும் திருப்பணி வேலைகளும் எதிர்கால பணிகளும்

46. சிவபூமி திருவாசக அரங்கம் - நாவற்குழி

47. சிவபூமி செம்மணி கலாசார வரவேற்பு நிலையம்

48. சிவபூமி தமிழியல் ஆராய்ச்சி நிலையம் - யாழ்ப்பாணம்


அபயம் இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

071 07 12345

மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு
(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)





தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# தைப்பொங்கலை முன்னிட்டு விழாக்கோலம் பூண்ட யாழ்ப்பாணம்



தைப்பொங்கல், தமிழர்களின் பாரம்பரிய திருநாள். இயற்கையின் மீதான நன்றியை வெளிப்படுத்தும் விழாவாக இது கொண்டாடப்படுகிறது. ஆனால், கால மாற்றங்களுக்கு ஏற்ப இந்த விழாவும் புதிய அம்சங்களைப் பெற்று வருகிறது.

ஒரு காலத்தில், மண் பானைகள் மற்றும் இயற்கை எரிபொருள் கொண்ட அடுப்புகளில் சமைப்பது வழக்கமாக இருந்தது. இன்று, மின் அடுப்புகள் மற்றும் எரிவாயு அடுப்புகள் பயன்பாட்டில் உள்ளன. ஆனால், மண் பானையில் பொங்கல் வைப்பதன் சிறப்பை மறக்காமல், பலர் இன்றும் பாரம்பரிய முறையையே பின்பற்றுகின்றனர். இது பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஒரு அழகான இணைப்பை ஏற்படுத்துகிறது.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, யாழ்ப்பாணம் நகரம் மிகவும் அழகாக காட்சியளிக்கிறது. பாரம்பரிய பொருட்களின் விற்பனை மற்றும் மக்களின் ஆர்வம், இந்த பண்டிகையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றன.



பாரம்பரிய மண் பானைகள் முதல் நவீன வடிவமைப்புகளிலான பானைகள் வரை பல்வேறு வகையான மண் பானைகள் விற்பனைக்கு வந்துள்ளன.

பானைகளில் பல வண்ணங்களில் நிறம் தீட்டி அலங்கரித்துள்ளனர். இது பண்டிகை சூழலுக்கு மேலும் அழகு சேர்க்கிறது. அடுப்பு கற்கள் மற்றும் அடுப்புகள்: பொங்கல் வைப்பதற்கு தேவையான அடுப்பு கற்கள் மற்றும் அடுப்புகள் பல்வேறு வடிவங்களில் கிடைக்கின்றன.

பல்வேறு வகையான நவீன பட்டாசுகள் விற்பனையும் அமோகமாக இடம்பெற்றது. சிறுவர் முதல் முதியவர் வரை அனைவரும் இந்த பண்டிகை பொருட்களை வாங்கிச் செல்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இந்த மாற்றங்கள் ஒருபுறம் இருக்க, தைப்பொங்கலின் அடிப்படை உணர்வுகள் மாறவில்லை. இயற்கைக்கு நன்றி கூறுதல், குடும்பத்துடன் ஒன்று கூடுதல், பாரம்பரியத்தைப் பேணுதல் போன்ற உணர்வுகள் இன்றும் தொடர்கின்றன.




## நாடாளுமன்ற உணவகத்தில் வரலாறு காணாத விலையேற்றம்



நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாடாளுமன்ற உணவகத்தில் உணவை பெற்றுக்கொள்ள 450 ரூபாய் கட்டணம் 2,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நல்ல ஒரு முடிவு. இதுவரையில் காலை உணவுக்காக அறவிடப்பட்டுவந்த 100 ரூபாய் கட்டணம் 600 ரூபாவாகவும், மதிய உணவுக்கு அறவிடப்பட்ட 300 ரூபாய் 1,200 ரூபாவாகவும், தேநீருக்கான கட்டணம் 50 ரூபாவிலிருந்து 200 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# ATM இயந்திரம் உருவாக காரணமாக இருந்த காதல்

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜோன் ஷெப்பர்ட் பேரோன் என்பவர் தன் மனைவிக்கு பிறந்தநாள் பரிசளிக்க விரும்பி, அதற்காக வங்கியில் இருந்து பணம் எடுக்க வரிசையில் நின்றார்.

பொறுமையுடன் காத்திருந்த அவர் கேஷ் கவுன்டரை நெருங்கியபோது, “டைம் முடிந்து விட்டது” என்று கூறி கேஷியர் கவுன்டரை அடைத்து விட்டு சென்று விட்டார். பெரும் ஏமாற்றம் அடைந்த ஜோன், வெறுங்கையோடு சென்று மனைவியைப் பார்க்க விரும்பவில்லை.

கையில் இருந்த கொஞ்சம் சில்லறையை வைத்து, சாக்லேட்களை வாங்கிக் கொடுத்து மனைவியை மகிழ்விக்கலாம் என நினைத்து சாக்லேட் வெண்டிங் இயந்திரத்தைத் தேடிச் சென்றார். இருந்த காசுக்கு கிடைத்த சாக்லேட்டை வாங்கி மனைவிக்கு கொடுத்தாலும், பணம் இருந்தும் நம்மால் விரும்பிய பரிசை மனைவிக்கு அளிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு இருந்தது.

அப்போது, அவர் கண் முன்னால், பூட்டிய வங்கிக் கவுண்டரும், இயந்திரத்தில் காசு போட்டவுடன் கொட்டிய சாக்லேட்களும் அவர் மனதில் மீண்டும் மீண்டும் வந்து போயின. பணம் போட்டால் சாக்லேட் கிடைக்கும் இயந்திரம் போல், எந்த நேரத்திலும் பணத்தையும் எடுக்க ஒரு மெஷின் இருந்தால் எப்படி இருக்கும் என்று அவர் சிந்தனையில் உருவானது தான் இவர் உருவாக்கிய முதல் ஏடிஎம் இயந்திரம் 1969ம் ஆண்டு வடக்கு லண்டனில் உள்ள பார்க்லேஸ் வங்கியில் வைக்கப்பட்டது.






விரும்பிய நேரத்தில் பணத்தை எடுக்கவும் மிஷினா ?என அனைவரும் ஆச்சரியப்பட்டனர். அதிலும் ஒரு சிக்கல் ஏற்பட்டது. ஜோனின் மனைவியால் ஏடிஎம் அட்டைக்கான ஆறு இலக்க ரகசிய பின் நம்பரை ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. உடனே செயலில் இறங்கிய ஜோன், அதை நான்கு இலக்கமாக குறைத்தார்.

இன்று ஏடிஎம் இயந்திரங்கள் காலத்திற்கேற்ப நவீன மாற்றங்களை கண்டு விட்டாலும், இதற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது ஜோனின் காதலில் மலர்ந்த அந்த முதல் ஏடிஎம் தான். காதல் மாதத்தில் இந்த சுவாரஸ்யமான தகவலை பகிர்கிறது தூமி!

இன்று உலகளவில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட ஏடிஎம்கள் உள்ளன. ஏடிஎம் மிஷின் உருவாக காரணமாக இருந்த ஜோன் ஷெப்பர்ட் பேரோன் தன் 84வது வயதில் கடந்த 2020 மே 19ம் தேதியன்று காலமானார்.......

## நெதர்லாந்தில் மனித உடலின் அற்புத உலகம்

நெதர்லாந்தில் உள்ள ஒக்ஸ்ட்கீஸ்ட் நகரில் அமைந்துள்ள கார்பஸ் அருங்காட்சியகம், மனித உடலை உள்ளிருந்து அறிந்து கொள்ள ஒரு அற்புதமான வாய்ப்பை வழங்குகிறது. இந்த அருங்காட்சியகத்தில், பார்வையாளர்கள் மனித உடலின் பிரம்மாண்டமான மாதிரியின் உள்ளே, மிகச் சிறியவர்களாக மாறி, உடலின் அனைத்து உறுப்புகளையும் நெருங்கிப் பார்க்க முடியும். இந்த அற்புதமான அனுபவம், மனித உடலின் செயல்பாடுகள் குறித்து தெளிவான புரிதலை ஏற்படுத்தி, மருத்துவம் மற்றும் உடல்நலம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும்.





# ஈழத்தின் நாடகக் கலையின் பேராளுமை
# குழந்தை ம.சண்முகலிங்கம்
## நினைவுகளின் நிழல்கள்

ஈழத்து தமிழ் நாடகத்தின் பெரு விருட்சம், நாடக அரங்க கல்லூரியின் ஸ்தாபகர், ஈழத்து சிறுவர் நாடக தந்தை என ஈழத்து நாடக வரலாற்றில் தவிர்க்க முடியாத மாபெரும் ஆளுமையான நாடகம் தந்த உண்மை மனிதன் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் காலமானார்.



குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் நடிகராக, நாடகாசிரியராக, நெறியாளராக, தயாரிப்பாளராக, ஆய்வாளராக, நாடகப்போதானாசிரியராக, நாடகக் களப்பயிற்சியாளராக, விமர்சகராக, உலக நாடக வராலாற்றாசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, நாடக அரங்கக் கல்லூரி நிறுவுனராக, கல்விசார் அரங்கினை பிரக்ஞை பூர்வமாக உருவாக்கியவர் என பல்பரிமாணமுடையவராக பல் துறை ஆற்றல் கொண்டவராக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவு ஈழத்துத் தமிழ் கலையுலகிற்கு பேரிழப்பாகும். அவரது குடும்பத்தாருக்கும், மாணவர்களுக்கும், ரசிகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் புகழ் வணக்கங்களையும் துமி தெரிவித்துக்கொள்கிறது.

### அறிமுகம்:

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் நாடகத்துறையில் பட்டப்படிப்பை

முடித்து, அதே பல்கலைக்கழகத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நாடகத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றினார்.


## கலை இலக்கியப் பணிகள்:

இவர் இதுவரை நூற்றி இருபதிற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியிருக்கிறார். இவற்றில் சில நூலுருவிலும் வந்திருக்கின்றன. நாடக ஆசிரியர்களான சோபாக்கிளிஸ், இப்சன், அன்ரன்-செக்கோவ், பேட்டல்-பிரக்சட், தாகூர் ஆகியோரின் நாடகங்களில் சிலவற்றையும் சில யப்பானிய நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

1980களுக்குப் பின்னர் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளை தனது நாடகங்கள் மூலமாக வெளிப்படுத்திய இவர் ராணுவ அடக்குமுறை பெண்களுக்கெதிரான அடக்குமுறை மாணவர்களை அடக்கிய கல்வி அடக்குமுறை சாதிய அடக்குமுறை சமூகத்தின் போலித்தனங்கள் என்பவற்றையெல்லாம் தனது நாடகங்கள் மூலமாக வெளிப்படுத்தி வந்துள்ளார்.

இவர் எழுதி இயக்கிய மண் சுமந்த மேனியர் என்ற நாடகம் யாழ்ப்பாணத்தின் பட்டி தொட்டியெல்லாம் மேடையேற்றப்பட்டு மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் இவரது ஏனைய நாடகங்களான அன்னை இட்ட தீ, எந்தையும் தாயும் ஆகிய நாடகங்களும் மிகவும் பிரபல்யம் ஆனவை. இவரது ஆர்கொலோ சதுரர் நாடகம் எல்லா நாடகங்களிலும் உச்சமானது. யுத்தத்தில் வெற்றி அல்லது முடிவு ஒன்றில்லை. தோற்பது மனிதம் தான் என்பதை பாரதப் போரின் 14ம் நாள் போரை மையப்படுத்திக் காட்டுகின்றார்.

இவர் மொழிபெயர்த்த வெண்கட்டி வட்டம் மக்கள்களரி தயாரிப்பில் 2016இல் தமிழ் சிங்கள மலையக முஸ்லிம் கலைஞர்களின் சங்கமிப்பில் யாழ்ப்பாணத்திலும் பண்டத்தரிப்பிலும் கொழும்பிலும் மேடையேறியமை குறிப்படத்தக்கது. நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பாக உறவுகள் நாடகம் 2017இல் மீளவும் இரதிதரன் இயக்கி பண்டத்தரிப்பு, காரைநகர், புத்தூர், வ/வுனியா ஆகிய இடங்களில் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் மேடையேற்றப்பட்டு வருகின்றது.



அதேபோல் அவரது மொழிபெயர்ப்பில் தான் விரும்பாத் தியாகி நாடகமும் பல மேடையேற்றங்களைக் கண்டு வருகின்றது. 1976 ஆம் ஆண்டில் வெளியான பொன்மணி இலங்கைத் திரைப்படத்தில் இவர் நடித்துள்ளார். இவர் மொழிபெயர்த்த கவிதைகள் சில தாயகம் இதழில் பிரசுரமானதுடன் தாயகம் இதழின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகிக்கின்றார்.

## நாடகக் கல்வி மற்றும் பயிற்சி:

1970களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி ஒன்றினை நிறுவி நாடகத்தை ஒரு பயிற்சி நெறியாக தமிழ் கலைஞர்கள் மத்தியில் அறிமுகம் செய்தார். இந்தப் பணி மூலமாக யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே காத்திரமான நாடகத்துறை ஒன்று உருவாக இவர் காரணமாக இருந்திருக்கின்றார்.

## கௌரவங்கள்:

நாடகத்துறையில் அவரது முக்கிய பங்களிப்பை மதித்து, 2001ஆம் ஆண்டில் கிழக்குப் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதி (முனைவர்) பட்டம் வழங்கியது.

## சிறுவர் நாடகங்கள்:

ஈழத்தின் சிறுவர் நாடகத்தின் முன்னோடியான இவர், "கூடிவிளையாடு பாப்பா", "காட்டுராஜா", "முயலார் முயல்கிறார்" போன்ற பல சிறுவர் நாடகங்களையும் எழுதி இயக்கியுள்ளார்.

கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் மறைவு ஈழத்துத் தமிழ் நாடக உலகிற்கு பேரிழப்பாகும். அவரது நினைவுகள் அவரது கலைப்பணிகள் ஊடாக எம் மனங்களில் என்றும் நிலைத்திருக்கட்டும்.



# சிறப்பாக நடைபெறவுள்ள சீரணி நாகபூஷணி அம்மன் மஹா கும்பாபிஷேகம்!

சீரணி நாகபூஷணி அம்மன் கோயில் மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது! நாகம் பூஜித்து வழிபட்ட சிறப்பிற்குரிய சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மனின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10.02.2025 (திங்கட்கிழமை) நடைபெறவுள்ளது.

அடியவர்களுக்கான ஏற்பாடுகள்:

அடியவர்கள் எண்ணெய் காப்பு சாத்துவதற்கான ஏற்பாடுகள் 08.02.2025 மற்றும் 09.02.2025 ஆகிய இரு தினங்களில் செய்யப்பட்டுள்ளன. சிவசிறி கு.சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்கள் பிரதம குருக்களாக இருந்து அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தை நெறிப்படுத்துவார். இந்த மங்களகரமான நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெறுவோம்!



# உயரப்போகும் கட்டிடங்கள்




தற்போதைய நிலவரப்படி துபாயில் இருக்கும் 824 மீட்டர் உயரம் கொண்ட டீரசத முாயடகைய தான் உலகின் மிக உயரமான கட்டிடமாகும். (Burj என்ற அரபிச் சொல்லுக்கு Tower என்று பொருள்). இதை மிஞ்சும் வகையில் சவுதி அரேபியாவின் ஜித்தா நகரில் 1000 மீட்டர் (ஒரு கிலோமீட்டர்) உயரம் கொண்ட Jeddah Tower மிகப் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தின் பாதிக்கும் மேற்பட்ட பணிகள் முடிவடைந்து விட்டன.

இதுபோக 2034 ம் ஆண்டு சவுதிஅரேபியாவில் FIFA உலக கோப்பை நடைபெறுவதையொட்டி அதன் நினைவாக 2000 மீட்டர் (இரண்டு கிலோ மீட்டர்) உயரம்கொண்ட Rise Tower கட்டப்படுமென்ற செய்திகளும் உலவுகின்றன. இரண்டு கிலோமீட்டர் உயரமான கட்டிடத்தை இப்போதிருக்கும் தொழில்நுட்பத்தால் கட்டுவதெல்லாம் சாத்தியப்படுமா என்பதைக்காண பெரும் ஆவலாக உள்ளது. இன்றைய மனிதனிடம் வானமும் வசப்படுகிறது.

# எவரெஸ்ட் சிகரம் ஏறுவதற்கான கட்டண உயர்வு

நேபாள அரசு, எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கான அனுமதி கட்டணத்தை 36மூ உயர்த்தியுள்ளது. இது, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது. கடந்த ஆண்டில் எவரெஸ்ட் சிகர மலைப்பகுதிகளில் இருந்து 119 டன் குப்பைகளை நேபாள அரசு அகற்றி உள்ளது. மேலும் மலையேறியபோது உயிரிழந்த 14 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டு உள்ளன. இதுபோன்ற பணிகளுக்கு நேபாள அரசு அதிக தொகையை செலவிட நேரிடுகிறது. எனவே கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது. இவ்வாறு கென்டன் தெரிவித்தார்.



# சர்வதேச தாய் மொழி தினம்

மொழி என்பது ஒரு சமூகத்தின் அடையாளமும் கலாச்சாரத்தின் பிரதிபலிப்புமாகும். மனித சமூகத்தின் வளர்ச்சியில் மொழிக்கான பங்கு பெரிது. இந்த உலகில் பல மொழிகள் பேசப்பட்டு வருகின்றன, அவற்றில் ஒவ்வொன்றும் தனித்துவமிக்கதொரு பாரம்பரியத்தையும் பாரம்பரியத்தை உள்ளடக்கியதுமான ஒழுங்கு முறையையும் கொண்டுள்ளன.

இவ்வாறு பல்வேறு மொழிகள் இருந்தாலும், தாய்மொழி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர்போல இணைந்த ஒன்று. தாய் மொழி என்பது குழந்தைகள் முதல் கற்கும் மொழியாகும். இது அவர்களின் சிந்தனை முறையை, உணர்வுகளை, அடையாளத்தை, மற்றும் அறிவுசார் வளர்ச்சியை வழிநடத்தும் ஒரு கருவியாகவும் செயல்படுகிறது.

தாய் மொழியின் முக்கியத்துவத்தை உலகம் முழுவதும் எடுத்துக் காட்டுவதற்காக ஆண்டுதோறும் பிப்ரவரி 21 அன்று சர்வதேச தாய் மொழி தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளை 1999 ஆம் ஆண்டு யுனெஸ்கோ (UNESCO) அறிவித்தது, மேலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து இது உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.

இந்த நாளின் அடிப்படை காரணம் 1952 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் அதற்காலக தாயகமான கிழக்குப் பாகிஸ்தானில் (இன்றைய வங்காளதேசம்) நடந்த ஒரு வரலாற்றுச் சம்பவம் ஆகும். அப்போது பங்காள மொழிக்கு உரிய உரிமை கோரிய மாணவர்கள் போராடியபோது அவர்கள் மீது காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர், இதனால் சில மாணவர்கள் உயிரிழந்தனர். அவர்களின் தியாகம் மொழி உரிமைக்கான போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

தாய் மொழி தினம், மொழிப் பல்வகைமையை ஊக்குவிக்கும் மற்றும் உலகளாவிய சமுதாயங்களில் மொழிக் கலாச்சாரங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கொண்டாடப்படுகிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் பேசப்படும் மொழிகளில் பல ஆபத்தான நிலையில் இருக்கின்றன. ஆங்கிலம், சீனம், ஹிந்தி போன்ற சில முக்கிய மொழிகள் உலகளவில் பேசப்பட்டாலும்,



சிறுபான்மையினர் பேசும் மொழிகள் மறைந்துகொண்டு செல்கின்றன. இது ஒரு சமூகத்திற்கான அடையாள அழிவாகவே பார்க்கப்படுகிறது.

இந்நாளில், பல்வேறு நாடுகளில் மொழியைக் கொண்டாடும் விதமாக கருத்தரங்குகள், கலாச்சார நிகழ்வுகள், எழுத்தாளர் சந்திப்புகள், மொழி மீதான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ஆகியவை நடத்தப்படுகின்றன. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள் ஆகியவற்றில் தாய்மொழியின் சிறப்பு குறித்து விலகாக உரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

மொழி என்பது ஒரு சமூகத்தின் பாரம்பரியம் மட்டுமல்ல, அதன் எதிர்காலத்திற்கான அடிப்படையாகவும் இருக்கிறது. நாம் அனைவரும் நம்முடைய தாய் மொழியை பேணி பாதுகாக்க வேண்டும். இது எங்கள் கலாச்சாரத்தையும், மரபுகளையும், அடையாளத்தையும் நிலைநிறுத்த உதவும். இதனால், தாய்மொழிக்கு உரிய மரியாதை அளித்து, அதனை தொடர்ந்து பேணி வளர்த்தல் ஒவ்வொருவரின் கடமையாகும்.

## யாழ் போதனா வைத்தியசாலை என்புமுறிவு விடுதிகள் (விடுதி 14 மற்றும் 17) புதிய கட்டிடத்தொகுதிக்கு இடம் மாற்றம்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட பலாலி வடக்கு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் (04.12.2024) பொங்கல் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. இதன்போது வடமாகாண ஆளுநர், யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), தெல்லிப்பளை பிரதேச செயலர், பிரதேச செயலக அலுவலர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.








# காவியமாகிப்போன ரோமியோ ஜூலியட் கதை

காதல் என்பது காலத்திற்கும் எல்லைக்கும் அப்பாற்பட்ட ஒரு பந்தமாகும். மனித வாழ்வின் அடிப்படையான உணர்வாகக் கருதப்படும் காதல், பலரின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி, சிலரின் பெயர்களை வரலாற்றில் அமரத்துவம் பெற்றவைகளாக மாற்றியுள்ளது. அந்த வகையில், உலகின் மிகச் சிறந்த காதல் கதைகளில் ஒன்றாக ரோமியோ-ஜூலியட் கதையை பார்க்கலாம். இது மகிழ்ச்சியுடன் முடிவடையாத ஒரு காதல் என்றாலும், அதில் வெளிப்படுத்தப்படும் காதல் காலங்கள் கடந்தும் காவியமாக போற்றப்படுகிறது.

ரோமியோ & ஜூலியட் என்பது உலகின் பிரசித்திபெற்ற காதல் கதைகளில் ஒன்றாகும். இக்கதை, 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற நாடக ஆசிரியரான வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய ஒரு நாடகம் ஆகும். காதலின் அழகையும் அதற்காகச் செலுத்த வேண்டிய தியாகத்தையும் இது வெளிப்படுத்துகிறது.

இந்த கதை இத்தாலியின் வெரோனா நகரத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. அந்த நகரில் மொன்டாக்யூ (Montague) மற்றும் காப்புலெட் (Capulet) என்ற இரு பெரும் குடும்பங்கள் இருந்தன. இந்த இரண்டு குடும்பங்களுக்கும் இடையே பல தலைமுறைகளாக நீடித்த பகை நிலவியது. இந்த குடும்பங்களின் கோபம் மற்றும் பகைமையின் பின்னணியில் தான், காதலுக்காக தியாகம் செய்த ரோமியோ & ஜூலியட் கதையானது மலர்கிறது.

ரோமியோ, மொன்டாக்யூ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம் இளவரசன். ஒருநாள், அவரது நண்பர்களுடன் காப்புலெட் குடும்பத்தின் ஓர் அரண்மனை விருந்திற்கு மறைந்திருந்து செல்கிறார். அங்கே, ஜூலியட்டை (Capulet குடும்பத்தின் இளம்பெண்) பார்க்கிறார். இருவரும் முதல்பார்வையிலேயே காதலாகிவிடுகிறார்கள். ஜூலியட் வீட்டின் தோட்டத்தில், இருவரும் சந்தித்து, தங்களது காதலை பரஸ்பரம் உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள்.

ரோமியோ மற்றும் ஜூலியட் இருவரும் தங்களது குடும்பங்களின் பகையை மீறி, ரகசியமாக திருமணம் செய்ய முடிவு செய்கிறார்கள். அவர்களுக்கு ஒரு துறவியான பிரையர் லாரன்ஸ் (Friar Laurence) மறைந்திருந்து திருமணம் செய்து வைக்கிறார். ஆனால் அவர்களின் சந்தோஷம் நீடிக்கவில்லை.

ஜூலியட்டின் உறவினரான டைபால்ட் (Tybalt), ரோமியோவை எதிர்த்து சண்டையிட விரும்புகிறார். ஆனால்,



ரோமியோ அதை தவிர்க்க முயல்கிறார். ஆனால், ரோமியோவின் நண்பர் மெர்குஷியோ (Mercutio) திடீரென டைப்பால்டுடன் சண்டை போடுகிறார், இதில் அவர் கொல்லப்படுகிறார். இதனால் கோபமடைந்த ரோமியோ, டைப்பால்டை கொன்று விடுகிறார். இதன் காரணமாக, அவருக்கு நகரில் இருந்து நாடுகடத்தல் விதிக்கப்படுகிறது.

இதேநேரத்தில், ஜூலியட்டின் பெற்றோர், அவரை ஒரு நல்ல குடும்ப இளவரசனுடன் திருமணம் செய்ய திட்டமிடுகிறார்கள். இதனால் குழப்பமடைந்த ஜூலியட், பிரையர் லாரன்ஸை அணுகுகிறாள். பிரையர், ஜூலியட்டுக்கு ஒரு மருந்து கொடுக்கிறார். அதை குடித்தால், சில மணிநேரம் உயிரற்றவளாகத் தோன்றுவாள். இதனால், அனைவரும் அவள் இறந்துவிட்டதாக நினைத்து, அவளை அடக்கம் செய்யும் போது, ரோமியோ வந்து அவளை மீட்டு செல்லலாம் என்று திட்டமிடுகிறார்.

ஜூலியட் அந்த மருந்தை உட்கொள்ள, அவள் உண்மையாக இறந்துவிட்டதாக குடும்பத்தினர் நினைத்து, அடக்கி விடுகிறார்கள். ஆனால், இந்த செய்தி ரோமியோவிற்கு தவறாக சென்றடைகிறது. ஜூலியட் உண்மையாக இறந்துவிட்டாள் என்று நினைத்த ரோமியோ, கல்லறைக்கு சென்று, தனது உயிரை சுயமாக மாய்த்துக்கொள்கிறார்.

இவ்வளவு நேரத்திற்குள், மருந்தின் விளைவுகள் நீங்கிய ஜூலியட் விழித்தெழுகிறாள். தனது காதலன்

இறந்ததை கண்டு மனமுடைந்து, அவளும் தற்கொலை செய்து கொள்கிறாள்.

அவர்கள் இருவரின் மரணத்தை அறிந்ததும், மொன்டாக்யூ மற்றும் காப்புலெட் குடும்பங்கள், தங்களது பகையை முடிவுக்குக் கொண்டு வந்து, அமைதியுடன் வாழத் தொடங்குகின்றனர்.

இக்கதை, காதலின் மீதான ஆழமான உணர்வையும், சமூகம் மற்றும் குடும்பங்களின் கட்டுப்பாடுகளால் ஏற்பட்ட தியாகத்தையும் வெளிப்படுத்துகிறது. காதலுக்காக செய்த தியாகம், மனித மனதின் உண்மையான பெருமையை வெளிப்படுத்துகிறது. காதலுக்கு எதிராக சமூக தடைகளை ஏற்படுத்தினால், அது எவ்வாறு ஒரு அழிவை ஏற்படுத்த முடியும் என்பதை இந்த கதை உணர்த்துகிறது. இன்றும் ரோமியோ & ஜூலியட் என்பது காதலின் உச்சக்கட்டத்தைக் குறிக்கும் ஒரு கருப்பொருளாக இருந்து வருகிறது.

காதலர் தினம் உலகெங்கிலும் பிப்ரவரி 14 அன்று கொண்டாடப்படுகிறது. இது செயின்ட் வலந்தைன் (Saint Valentine) என்ற கத்தோலிக்க புனிதரை நினைவுகூரும் நாளாகும். வரலாற்று குறிப்புகளின்படி, ரோம காலத்தில், காதலர்களின் திருமணத்திற்கு எதிராக அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. ஆனால், செயின்ட் வலந்தைன் ரகசியமாக காதலர்களை மணம் முடிக்கச் செய்தார். இதனால் அவர் சிறைக்குச் செல்ல நேர்ந்தது, மேலும் சிறையில் இருக்கும் போது சிறை அதிகாரியின் மகளிடம் காதலாகி விட்டார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, அவர் எழுதிய கடிதத்தில் "உன் வலந்தைனிலிருந்து"



என்று கையொப்பமிட்டார். இதுவே காதலர் தினத்திற்கான அடிப்படை காரணமாக கருதப்படுகிறது.

ரோமியோ-ஜூலியட் கதையும், செயின்ட் வலந்தைனின் தியாகமும், உண்மையான காதல் எவ்வளவு ஆழமானது என்பதைக் காட்டுகிறது. காதல் என்பது வெறும் சந்தோஷமோ, விருந்தோ, பரிசுகளோ அல்ல, அது ஒருவருக்காக இன்னொருவர் செய்யும் தியாகம், அர்ப்பணிப்பு, நிலைத்த நிலையான உணர்வு என்பதையும் உணர்த்துகிறது.

இன்று காதலர் தினம், காதலர்களுக்கு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்த ஒரு சிறப்பான நாளாக கொண்டாடப்படுகிறது. ஆனால் உண்மையான காதல் ஒரே நாளில் கொண்டாடப்பட வேண்டியது அல்ல. அது வாழ்நாளெங்கும் உணர்ந்து அனுபவிக்க வேண்டிய பெருந்தன்மையான பந்தமாக இருக்க வேண்டும். ரோமியோ - ஜூலியட் போல சமூகக் கட்டுப்பாடுகள் அல்லது செயின்ட் வலந்தைன் போல தியாகம் தேவையில்லை என்றாலும், காதலுக்கான மரியாதையும் புரிந்துணர்வும் இருப்பதே உண்மையான காதலை நிரூபிக்கிறது.

**காதலுக்கு ஆடம்பர பரிசுகளால் அல்ல, ஆழமான அன்பால் மரியாதை செய்யுங்கள்.**

## அபிராமி பட்டர் விழா

அமாவாசை தினத்தை தன் பக்தியால் பௌர்ணமி தினமாக்கிய அபிராமிப் பட்டர் விழா 29.01.2025 அன்று எமது தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாலை 3.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி, மாலை 3.30 மணிக்கு அபிராமி அந்தாதி பாராயணம் நடைபெற்று
மாலை 4.30 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து அம்பாள் அபிராமிப் பட்டருடன் உள்வீதி வலம்வரும் அற்புதக் காட்சி இடம்பெற்றது.

அபிராமி அந்தாதியை கருங்கல்லில் தாங்கி அருட்கடாட்சம் பொழியும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு ஆசாரசீலர்களாக பலர் குடும்பத்தினருடன் வருகை தந்து அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டார்கள்.






# பாடசாலைகளில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையின் முக்கியத்துவமும் வழிகாட்டல் ஆலோசனை சேவையை திறம்பட செயற்படுத்துவதற்கான பரிந்துரைகளும்

மாணவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை வடிவமைப்பதில் பாடசாலைகளில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவையானது முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்கால கல்வி வலையமைப்பு சிக்கலானதாகவும், போட்டித்தன்மையுடனும் இருப்பதனால், மாணவர்களுக்கு ஆதரவான சூழலை கட்டியமைக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மாணவர்களுக்கு கல்வி சார்ந்த சவால்களைச் சமாளித்திடவும், தகவலறிந்த தொழில் தேர்வுகளை மேற்கொள்ளவும், அவர்களின் செயற்திறனைப் பாதிக்கக்கூடிய தனிப்பட்ட மற்றும் சமூகப் பிரச்சினைகளை நிர்வகிக்கவும் தேவையான ஆதரவுகளை மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

வில்லியம் புரொக்டர் (1925) எனும் அறிஞர் “கல்வியும் தொழில்துறை வழிகாட்டலும்” எனும் நூலில் வழிகாட்டல் என்பது “மாணவர்கள் பாடசாலையிலும் வாழ்க்கையிலும் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்வதற்கு பயன்படும் செயற்பாடு” என எடுத்துக்காட்டியுள்ளார்.

கால் ரோஜர்ஸ் (Carl.R.Rogers) என்பவர் “ஆலோசனை என்பது ஒருவருக்கு அவரைப் பற்றிய சுய விளக்கத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் அவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவரே தீர்த்துக் கொள்ளுமாறு வழங்கும் உதவி” என குறிப்பிடுகின்றார் அத்துடன் ஆலோசனை என்பது புத்திகூறல், உபதேசித்தல், எச்சரித்தல் ஆகிய ஒருமுகப்படுத்தப்பட்ட செயற்பாடு அல்ல என்பதை வலியுறுத்தியுள்ளார்.

வழிகாட்டல் மற்றும் ஆலோசனை என்பது தனிநபர்கள் தங்களைப் பற்றியும் அவர்களின் சூழலைப் பற்றியும் புரிந்துகொண்டு தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், தனிப்பட்ட வளர்ச்சியை அடைவதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்ட ஒன்றோடொன்று தொடர்புடைய துறைகளாகும். டேவிட் வி ரைட்மான் எனும் அறிஞர் “கல்வியை பொறுத்தவரையில் நமது இலக்கை அடைவதற்கான இலட்சியம் வழிகாட்டுதலாகும் அதை அடைவதற்கான உத்திகள் ஆலோசனையாகும்” என



விளக்குகின்றார். வழிகாட்டல் மற்றும் ஆலோசனையானது சேவை தொடர்ச்சியானதாகவும், நெகிழ்ச்சித் தன்மையானதாகவும், இருத்தல் வேண்டும்.

வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் செயல்பாடுகளை ஐந்து பிரதான பிரிவுகளின் கீழ் நோக்க முடியும்.

- கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் (Educational Counselling)
- உளவியல் ஆலோசனை (Psychological Counselling)
- தொழில் சார் வழிகாட்டலும் ஆலோசனையும் (Career Guidance and Counselling)
- குடும்ப ஆலோசனை (Family Counselling)
- மனவடு தொடர்பான ஆலோசனை (Trauma Counselling)

இவை ஐந்தும் ஒன்றிலிருந்து ஒன்று தனித்து செயல்படுவதில்லை மாறாக ஒன்றோடு ஒன்று இடைத்தொடர்புடையன என்பதனை கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

தற்காலத்தில் நாளுக்கு நாள் மாணவர்கள் எண்ணற்ற சவால்களை எதிர்கொள்கின்றனர். இது அவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூகப் பிரச்சினைகளிலிருந்து உணர்ச்சி மற்றும்

உளவியல் ரீதியான மன அழுத்தம் வரை சென்று கல்வியில் சிறப்பாக செயல்படும் திறனை பாதிக்கிறது. இந்நிலையில் மாணவர்களின் கற்றல் சார் செயற்திறனை மேம்படுத்துவதில் தற்கால சூழலில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் சேவை மிகவும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

ஆரம்பகாலத்துடன் ஒப்பிடும் போது தற்காலத்தில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையானது பாடசாலைகளில் சற்று விரிவடைந்து காணப்படுகின்றது. இருப்பினும் காலத்தின் தேவைக்கேற்ப மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய தேவை உள்ளதென்பது நாம் அறிந்த விடயமேயாகும். இனிவரும் காலங்களில் பாடசாலைகளில் ஆலோசனை சேவையை திறம்பட செயற்படுத்துவதற்கான பரிந்துரைகள் பின்வருமாறு:

### பாடசாலை அதிபர்களுக்கான பரிந்துரைகள்

- வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைக்கான அலகொன்றினை ஸ்தாபித்து நடத்திச் செல்லல். (கட்டிட இடவசதி : பாடசாலை உள ஆற்றுப்படுத்தல் சேவைக்கென பாடசாலையில் ஒரு தனிக்கட்டிடம் அல்லது ஒரு இடம் ஒதுக்கப்பட வேண்டும். குறிப்பாக ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டுக்கென இடையூறுகளற்ற ஒதுக்கமான ஒரு தனி அறை, இணைப்பு ஆற்றுப்படுத்துனருக்கு ஒரு தனியறை, கோவைகள் மற்றும் பதிவேடுகளைப் பேணுவதற்குரிய ஒரு தனியறை, ஆய்வுகள் மற்றும் உளச்சோதனைகளை நடாத்துவதற்கென ஓர் ஆய்வுகூடம், தொழில் வாழ்க்கை வழிகாட்டலுக்கான ஆவணங்களை பார்வையிட வைப்பதற்கான இடம் என்பன கட்டிடத்தில் அமைய வேண்டும்).
- வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையை மேற்பார்வையிடல்.
- வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையை மேம்படுத்துவதற்கான பொருளாதார தேவைகளை நிறைவேற்றுதல்.
- பாடசாலை நேய அட்டவனையில் ஆற்றுப்படுத்தலுக்கென நேர ஒதுக்கீடு செய்தல்.
- ஆசிரியர்களுக்கு கருத்த ரங்குகள் மற்றும் பயிற்சிகளை ஏற்பாடு செய்தல்.

### பாடசாலை ஆசிரியர்களுக்கான பரிந்துரைகள்

- ஆற்றுப்படுத்தல் தேவைப்படும் மாணவர்களை இனங்காணல்.



- சாதாரண வகுப்பறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்.
- மாணவர்கள் பற்றிய தகவல்களை ஆற்றுப்படுத்துனருக்கு வழங்குதல்.
- காலத்துக்கு காலம் ஆற்றுப்படுத்தல் சார்பான உள்ளகப் பயிற்சிகளில் பங்குபெறல்.

### வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான பரிந்துரைகள்

- வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகள் தொடர்பாக மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- இணைப்பு ஆற்றுப்படுத்து னர்களுடன் இணைந்து செயற்படல்.
- கல்வி, தொழில், சமூக சார்ந்த துறைகளில் மாணவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
- ஆசிரியர்களது ஒத்துழைப்புடன் கல்வி முன்னேற்றத்தை காலத்துக்கு காலம் மீளாய்வு செய்தல்.
- விசேட தேவையான மாணவர்களை இனங்கண்டு உதவி வழங்குதல்.
- உளச்சோதனை, பேட்டி காணல் போன்ற நுட்பங்களை பயன்படுத்தி தகவல்களைச் சேகரித்தல், பதிவுப் புத்தகங்கள், தனியாள் ஆய்வு சேவைகள், பதிவேடுகள் அடைவுத்தரவுகள், பெற்றோர் பின்னணி விபரங்களை பெற்று முறையாக பேணல்.
- கல்வி அமைச்சின் விசேட கல்வி ஆலோசனை வழிகாட்டல் பிரிவு, கைத்தொழில், தொழில் நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தொழில் பயிற்சி நநிறுவனங்கள், தேசிய தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மருத்துவ நிலையங்கள்,



சுகாதார சேவை நிலையங்கள், சமூக நல ஸ்தாபனங்கள், கிராம சேவை உத்தியோகத்தர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருத்தல்.

### பாடசாலை மாணவர்களுக்கான பரிந்துரைகள்

- வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைக்கு பொறுப்பான ஆசிரியர்களுடன் சிறந்த தொடர்பை பேணல் வேண்டும்.
- வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவையை களங்கமாக நோக்குவதை தவிர்த்தல் வேண்டும்.
- கற்றல் மற்றும் தொழில் சார் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கு பொறுப்பான ஆசிரியர்களை நாடுதல் வேண்டும்.
- வீட்டில் மற்றும் பாடசாலைகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வகுப்பாசிரியர்களிடமோ அல்லது பொறப்பான ஆசிரியரிடமோ தெரிவித்து ஆலோசனை சேவையைப் பெற முன்வருதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளை முறையாக கையாள்வதன் மூலம் பாடசாலைகளில் சிறந்த வழிகாட்டல் ஆலோசனை சேவைகளை செயற்படுத்த முடியும். அத்தோடு மேம்பட்ட ஆளுமைத்திறனுடைய மாணவர்களைக் கட்டியெழுப்ப முடியும்.

## அமெரிக்காவில் கடும் பனிப்புயல்

அமெரிக்காவில் மேற்கு கரையோரத்தில் அமைந்துள்ள கலிபோர்னியா மாகாணத்தில் இந்த மாதம் தொடக்கம் முதல் காட்டுத்தீ பரவியது. கடுமையான காற்றுவீச்சு காரணமாக கடந்த 2 வாரங்களுக்கு மேலாக தொடர்ந்து பரவி வரும் காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகிறார்கள்.

இந்நிலையில், அமெரிக்காவின் தெற்கு மாகணங்களான புளோரிடா, மிசிசிப்பி, லூசியானா உள்ளிட்டவற்றில் புத்தாண்டு தொடங்கி கடுமையாக பனி பொழிந்து வருகிறது. இயற்கை அன்னையின் இந்த முரண்பாடான தாக்குதலில் இருந்து மீள முடியாமல் அமெரிக்கா திணறி வருகிறது. மைனஸ் 20 டிகிரி வானிலையுடன் கடுமையான பனிப்புயல் காரணமாக அங்குள்ள முக்கிய நகரங்களை பனி மூடியது. குறிப்பாக புளோரிடாவில் உள்ள மில்டன் நகரம் துருவ கண்டம்போல காட்சியளிக்கும் வகையில் பனிபொழிந்து வருகிறது. அங்கு 23 செ.மீட்டர் அளவில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவு கொண்டது என அந்த நாட்டின் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



ஐ.வி.மகாசேனன்

12



# என் கால்கள் வழியே...

## டெல்லியில் பயணத்தை இலகுவாகவும் கடினமாகவும் ஆக்கிய ரதங்கள்!

டெல்லியில் என் பயணத்தின் நினைவுகளை பயணத்திற்கான முறைகளும் நிறைய நிறைவான செய்திகளை சேகரித்துள்ளது. மெட்ரோ புகையிரத பயணங்களிற்கு அப்பால் உள்ளக அயல் பயணங்களுக்கு ரிச்சா, பேரூந்து, துவிச்சக்கரவண்டி (புரியுற மாதிரி சொன்னா சைக்கிள்), இருசக்கர வண்டி (புரியுற மாதிரி சொன்னா மோட்டார் சைக்கிள்), மற்றும் நடையும் பயனாகியுள்ளது. இதன விட சுயினைழ.ீ. ரடிநச செயலிகள் அதிக கதைகளை கொண்டுள்ளது.

ஊரில நடைதூரத்தில இருக்குற கடைக்கு போறதுனாலும், என் ரதமாகிய ளு ர ண ர ம யை ய யை யே முறுக்கியே பழகி இருந்தேன். டெல்லியில் தனிக்குடித்தனம் கட்டுப்பாடான செலவு நாளடைவில் நிலையை மாற்றியது. ஆரம்ப நாட்களில ஊர்ப்பழக்க சொகுசில எங்க போறதுனாலும் சுயினைழ.ீ. ருடிநச நண்பன் இருக்குறான் என்ற எண்ணங்களுடனேயே பயணம் ஆரம்பமாகும். என் நினைவுக்குள் நான் டெல்லியில் என் தேவைக்காக முதல் இறக்கிய தொலைபேசி செயலி சுயினைழ மற்றும் ருடிநசஆ தான் இருக்கும். இந்தியால செயலிகளாலேயே பலதை கடந்து செல்லலாம். இதைப்பற்றி முழுமையாகவே எழுத



வேண்டும். பின்னொரு கட்டுரையில் ‘டிஜிற்றல் இந்திய’ அனுபவங்களை பகிருகிறேன். இப்பதிவின் பயண முறை சேகரித்துள்ள நினைவுகளே நீளமானது.

டெல்லிக்கு விமானத்தில வந்து இறங்கியதும், டெல்லிக்குள் பிரவேசம், எங்களை வரவேற்க வந்திருந்த தங்கைகள் ருடிநச செயலியில் பதிவு செய்து மகிழுந்துல (பொதுப்புரிதலுக்கு சொன்னால் கார்) தான் அமைந்திருந்தது. ஏனுனா விமான நிலைய வளாகத்திற்குள் செயலி பதிவூடாக வாகனங்களை பெறக்கூடிய வசதி ருடிநச மற்றும் ழுடய செயலிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. சுயினைழ அத்தகைய வசதியை பெறவில்லை. நான் அதிகம் டெல்லியில் பயன்படுத்திய வாகன செயலி சுயினைழ தான். ‘First Impression Best impression’ என்பாங்கள். சுயினைழ உடனான ஈடுபாடும் அத்தகையானதே. பின்னாட்களில் பல வடுக்களையும் தந்தது. ஆனாலும் வாகன செயலி பற்றிய




முதல் அறிமுகத்தில், தமிழ்நாட்டு நண்பர்கள் சுயினைழ பற்றி தெரிவித்த பரிந்துரை ஆழமாக பிணைந்து விட்டது. டெல்லியில பெரிசா அதில குறையும் காணவில்லை.

முரண்பாடு மொழியினால் தான் வரும். மொழி தான் நமக்கு எங்கேயும் முரண்பாடு. ஒருமுறை இலங்கை தூதரகம் போயாச்சு. திரும்பி செல்வதற்கு சுயினைழ போட்டாச்சு. அதிகம் இருசக்கர வண்டி தான் போடுவது. சாரதி தொலைபேசி அழைப்பில் என் Locationக்கு வந்து விட்டதாக கூறுகின்றார். அவரை காணவில்லை. மீள அவர் ஏதோ சொல்றார், எனக்கு புரியல. தொலைபேசியிலும் டீயவவநசல உாயசபந குறைவாகவே உள்ளது. கடவுள் போல பொதுவான ஆங்கில மொழியும் ஹிந்தி மொழியும் தெரிந்த வழிப்போக்கன் அவ்விடமாக வந்தார். அவரிடம் உதவியாக Rapido சாரதிக்கு என் அமைவிட குறிப்பை தெரிவிக்குமாறு கேட்டேன். அவரும் சாரதிக்கு விளக்கம் கொடுத்தார். சாரதி பின்வீதியிலேயே நின்றார். நான் வளைவில் திரும்பினாலோ அல்லது அவர் வளைவில் திரும்பினாலோ சந்தித்திருப்போம். எனக்கு ஹிந்தி புரியல, சாரதிக்கு என் ஆங்கிலம் புரியல. இவ்மொழி முரண்பாடு அநேகமாகவே டெல்லியில் எதிர்கொண்டேன். பல சந்தர்ப்பங்களில் மௌனமே மொழியாவதுண்டு.

இதனை விட பெரிய சம்பவங்களும் சுயினைழ தந்திருக்கு. ஒன்று நான் தேடிய வினை, ஆதலால் அதற்கு

தீர்வை பெற முடியவில்லை. மற்றையது சாரதியின் ஏமாற்று வேலை. அதற்கு தீர்வை பெற முடிஞ்சுது.

முதலில மற்றவங்க தவறையே பார்ப்போம். அது தானே உலக வழக்கம். டெல்லி விமான நிலையத்திற்கு செல்வதற்கு சுயினைழவில் மகிழுந்து போட்டேன். விமான நிலையம் என்றால் மகிழுந்து தான் உள்ளே போகும். இருசக்கர வண்டிக்கு அனுமதி இல்லை. மெட்ரோ புகையிரதத்தில விமான நிலையத்துக்கு இலகுவாக போகக்கூடிய சூழலிலும், பொதியை இழுத்து செல்ற கடினத்தில மகிழுந்தை தேர்வு செய்தேன். எனக்கும் பயணம் இறுதி நேர அவசரமாகவும் அமைந்திருந்தது. செயலியில் 300 ரூபாவே காட்டியது. எனினும் விமான நிலையத்தில் இறங்குகையில் சாரதி தரிப்பிட கட்டணமெனக்கூறி 600 ரூபா கோரியிருந்தார். எனக்கும் பயண அவசரத்தால் முரண்பட நேரமின்றி பணத்தை இணைய வழியில் பகிர்ந்தேன். எனினும் ஏமாந்துட்டேனே என்பது மனதை கடுமையாக நெருடியது. ஆக ஊாநஉடம-கைக்கு நிரலில் நிற்கையில், பயணத்துக்கு மதிப்பீடு வழங்குவதில் சாதரணமாக ஒரு ளுவயச மாத்திரம் தெரிவு செய்தேன். சிறிது நேரத்தில் Rapido வாடிக்கையாளர் சேவைலிருந்து தொலைபேசி அழைப்பு வந்திச்சு, மதிப்பீடு குறைவுக்கான காரணத்தை வினாவினார்கள். விபரத்தை கூறினேன். மின்னஞ்சல் அனுப்புமாறு கூறினார்கள். ஏமாற்றத்தின் நெருடலால், சாரதி மேல வழக்கு தொடுப்பதே பெரிய ஆறுதலாக மின்னஞ்சல் அனுப்பினேன். இணையத்தில் பணம் பகிர்ந்தமையால், அவ்விபரத்தையும் மின்னஞ்சலில் இணைத்தேன். சிறிது நேரத்திலேயே Rapido மன்னிப்பு கோரியதுடன், மேலதிக பணத்தை மீள திருப்பியிருந்தார்கள். இது பெரிய திருப்தியை தந்தது. உள்ளுக்குள்ள ஒரு பெருமிதம்.

இனி என் தவறால் தீர்வை பெற முடியாது போன சம்பவத்தை குறிப்பிடுவோம். இதுவும் புகையிரதம்-விடுதிக்கு இடையிலான பயணக்கதை தான். இது டெல்லி Arrival. முதல் சொன்னது டெல்லி னுநியசவரசந. மற்றும் முதல் சொன்னது பகல். இரண்டாவது இரவு. விசயத்துக்கு வருவோம். டெல்லிக்கு பயணம். நள்ளிரவு தான் சென்றடைந்தேன். டெல்லி விமான நிலைய மெட்ரோ புகையிரதம் 11.30க்கு மூடிடுவாங்க. மறுபடி காலை 4.45க்கு தான். ஆக என் வழக்கமான Rapido போட்டன். இம்முறை இருசக்கர வண்டியையே தேர்வு செய்தேன். பெரிய பொதி இல்லை. இருசக்கர வண்டி உள்ளே வர முடியாததால் சாரதி வெளியே வரச் சொன்னார். நானும் வெளியே போனேன். விமான நிலையத்தில்



பயண வசதி உள்ள ருடிநசஇல் எவ்வளவு பண காட்டுவதாக கேட்டார். நான் குறைவாகவே கூறினேன். அதை தரும்படி கேட்டார். நானும் சம்மதித்தேன். Rapido செயலியை நிறுத்தி விட்டு தான் பயண பட்டோம். பயண நடுவில் பெரிய மழையும் வந்திச்சு. இடைநடுவில் மழைக்கு ஒதுங்கினோம். மழை நிற்பதாகவில்லை. நேரமும் அதிகமாக கடந்தது. எனவே மழை குறைய மழைக்குள்ளேயே தூறலுக்குள் பயணப்பட்டோம். விடுதி சேர்ந்ததும், தனது தொலைபேசியில் ருடிநச பண அளவு பரிசோதித்து நிதியை கேட்டார். ஆனால் அப்பணத்தொகை முன்னர் கதைத்ததை விட அதிகமாகவே இருந்தது. ஏறத்தாழ மகிழுந்து நிதியை அண்மித்தது. மழைக்குள் நனைந்து வந்து, மகிழுந்து சவாரிக்குரிய பணத்தை கொடுப்பதற்கு, மகிழுந்தில் சொகுசாக துயில் கொண்டு வந்திருக்கலாம் எனும் ஆதங்கம் பணம் கொடுக்க மறுத்தேன். சாரதியும் குறைத்து வருவதாக இல்லை. நான் பேசியதை விட 50 ரூபா அதிகம் தருவதாக ஏற்றேன். எனினும் சாரதி கிழுகுப்பிடியாக இருந்தார். தொடர்ந்து நானும் அதே கிளுங்கு பிடியை தொடர்ந்தேன். ஒரு படத்தின் நகைச்சுவையில் சந்தானமும் இன்னொருவரும் ஒருவரையொருவர் பார்த்து கொண்டே நிற்க நாட்கள் கடந்து போகும். அவ்வாறே நானும் சாரதியும் விட்டுக்கொடுப்பின்றி நின்றோம். மணிக்கணக்கானது. சாரதிக்கு வேறு Rapido கோரல்களும் வந்து கொண்டேயிருந்தது. இறுதியில் சாரதி இறங்கி வந்து எனது 50 ரூபா மேலதிக பண இணக்கத்தை வாங்கி சென்றார்.

முதலாவதில் எனது பக்கம் தவறற்று, சாரதி ஏமாற்றியமையால் Rapido பணத்தை மீள ஒப்படைத்தது. இரண்டாவதில் சாரதியின் நலன் கருதி நானும் சாரதியுடன் இணைந்து Rapidoit ஏமாற்றினோம். அதன் அறுவடையையும் அப்பயணத்திலேயே பெற்றேன்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் Rapido போட்டு, சாரதி வந்து அப்பக்கம் தனக்கு தூரமெனக்கூறி, Orderஐ Cancel பண்ண சொன்னார். எனினும் சாரதி வந்து Cancel பண்ணினா எனக்கு காசு வெட்டுமென நான் Cancel பண்ண மறுத்து விட்டேன். எனக்கு முன்அனுபவம் உண்டு. முன்னர் ஒருதடவை தொலைபேசி Struckஆகி Cancel ஆனதால் அடுத்த பயணத்தில் அப்பணத்தில் ஒருபகுதியை கொடுக்க நேரிட்டது.

இப்படி வில்லங்கமான கதைகள் இருந்தாலும், டெல்லி பயணத்தில் Rapido. பெரும் பகுதியை நிரப்புகிறது. இதைவிட பேருந்து, றிச்சா மற்றும் நடைபயணம் எல்லாம் தனிக்கதையாய் அனுபவங்களை அள்ளி தந்துள்ளது.

தொடராய் தொடருவோம்...!



# மரடோனா எனும் அசகாய சூரன்

தியாகமும், திறமையும் இணைந்திருக்கும் ஒரு மனிதர் என்றால் அது மரடோனா. கால்பந்து உலகின் சிறந்த வீரர்களில் ஒருவராக கருதப்படும் மரடோனா, தனது அற்புதமான ஆட்டத்தால் கோடிக்கணக்கான ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தார்.

1960 ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் தேதி அர்ஜென்டினாவில் பிறந்த அவர், சிறுவயதிலேயே கால்பந்துடன் உறவு கொண்டார். ஏழ்மை சூழலில் வளர்ந்தாலும், அவரது திறமை எந்த தடையையும் மீறியது. சிறு வயதில் உள்ளூர் கிளப்புகளுக்கு விளையாடி, தன் திறமையை நிரூபித்தார். 16வது ஆண்டில் தேசிய அணிக்காக அரங்கேறிய மரடோனா, உலகத்தரம் வாய்ந்த வீரராக வளரத் தொடங்கினார்.

1986 உலகக் கோப்பையில் அவரது மெய்சிலிர்க்க வைக்கும் ஆட்டம் இன்று வரைக்கும் பேசப்படுகின்றது. குறிப்பாக, அந்தப் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிரான கால் இறுதிப் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்தார். ஒன்று "Hand of God" என்று அழைக்கப்படும் சர்ச்சைக்குரிய கோல் மற்றொன்று "Goal of the Century" என அழைக்கப்படும், அவர் ஏழு வீரர்களை டிரிபிளிங் செய்து



ஆனால், எந்த சூழ்நிலையிலும் அவரது ரசிகர்கள் அவரை ஆதரித்தனர்.

விளையாட்டிற்கான அவரது அர்ப்பணிப்பு, வீரர்களுக்கான வழிகாட்டியாக இருந்தது. அவரது கால்பந்து திறமை மட்டுமின்றி, அர்ஜென்டினா நாட்டிற்கான உணர்வு, அவரது செயல்களில் வெளிப்பட்டது. கால்பந்து உலகில் அவர் வைத்த தடங்கள் என்றும் அழியாதவை.

2020 ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் தேதி மரடோனா மாரடைப்பால் உயிரிழந்தார். அவருடைய மறைவு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களை இரங்க வைத்தது. மரடோனா என்ற பெயர் காலத்தால் அழியாதது. அவர் ஒரு வீரராக மட்டுமல்ல, ஒரு உணர்வாக வாழ்ந்தார்.

அடித்த அசாதாரண கோல். இந்த ஆட்டத்துடன் அவர் உலகின் சிறந்த வீரர் என்ற அங்கீகாரத்தை பெற்றார்.

கிளப் மட்டத்திலும் அவர் பிரபலமானார். பார்சிலோனா, நாபோலி போன்ற அணிகளில் விளையாடி, நாபோலியை வெற்றி வீரமாக மாற்றியவர் மரடோனா. நாபோலிக்கு இரண்டு தடவை இத்தாலிய லீக் கோப்பையை வெல்ல உதவிய அவர், அந்த நகரத்தின் முக்கியமான அடையாளமாக மாறினார்.

ஆனாலும், அவரது வாழ்க்கை வெற்றிகளால் மட்டுமல்ல, சிக்கல்களாலும் நிறைந்தது. உடல்நல பிரச்சினைகள், மயக்கமருந்து பயன்பாடு, நிர்வாகத்துடனான பிரச்சினைகள் போன்றவை அவரை பாதித்தன.

